**மாத்தறை மாநகர சபை**

**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாத்தறை மாநகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தறை மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் ரூபா 212,051,507 தொகையான வருமானமும் ரூபா 204,723,288 தொகையான செலவினமும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மாநகர சபையின் 02 நூலகங்களுக்காக புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைத்ததன் பெறுமதி ரூபா 3,446,453 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்பு இல.16 இன் மூலம் ரூபா 480,195 தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் ரூபா 2,966,258 பெறுமதியான புத்தகங்களின் பெறுமதி குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மோட்டார் வாகனமும் வண்டியும் தொடர்பாக பட்டோலையில் மோட்டார் வாகனமும் வண்டிகளின் உள்ளபடியான பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படாமல் அண்ணளவுப் பெறுமதியான ரூபா 41,725,000 தொகை மாத்திரம் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பஸ் நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதி என்பவற்றை நிர்மாணிப்பதற்காக கடன் உடன்படிக்கையின் 9.03 ஆம் நிபந்தனை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2001 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 7/3/12 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கடன் மீளச் செலுத்துவதற்காக றுஹுணு அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நிலையான வைப்பின் வட்டி வருமானம் சபையின் வருமானமாக இல்லாதிருந்த போதிலும் அந்த வைப்பிற்காகக் கிடைத்த ரூபா 5,253,127 தொகையான வட்டி வருமானம் நாட்குறிப்பு பதிவு இலக்கம் 44 இன் மூலம் மீளாய்வாண்டின் வருமானப் பெறுவனவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) களஞ்சியப் பெறுவனவுச் சிட்டைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 14,599,530 ஆக இருந்த போதிலும் பிரதான பேரேட்டில் களஞ்சிய முற்பணக் கணக்கின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 23,907,486 ஆனமையால் ரூபா 9,307,956 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

ரூபா 27,714,750 தொகையான தீர்க்கப்படாத 13 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களுக்குரிய பெறுமதி ரூபா 21,631,942 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 22,844,946 ஆனமையால் ரூபா 1,213,004 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 225,511,938 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கணக்காய்வு ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 63,647,092 ஆகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,328,218 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,066,243 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 37,203 | 13,734 | 35,341 |
| (ii) | வாடகை | 17,036 | 6,662 | 13,713 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 9,950 | 3,669 | 1,035 |
| (iv) | ஏனைய வருமானம் | | | |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,018,449 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 4,881,365 தொகையும் கிடைக்கவேண்டியிருந்தது.

### 2.2.3 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிலுவையாக இருந்த தொகை அதிகரித்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் ரூபா 30.8 மில்லியனாக இருந்த நிலுவை நடப்பாண்டில் ரூபா 35.3 மில்லியன் ஆனமையால் நிலுவையின் அதிகரிப்பு 14.6 சதவீதமாக இருந்தது.

(ஆ) ஒவ்வொரு ஆண்டிலும் பற்றுச்சீட்டிடப்பட்ட தொகையிலிருந்து அறவிடப்பட்ட தொகையை கணிப்பீடு செய்யக் கூடிய முறையைக் காண்பிக்கின்ற கணனி மென்பொருள் தொகுதி காணப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவையாகக் காணப்பட்ட 11 அரசாங்க நிறுவனங்களிலிருந்தும், 9 வணிக

நுகர்வோர்களிடமிருந்தும், 23 வீட்டு நுகர்வோர்களிடமிருந்தும் ரூபா 6,693,046 கூட்டுத்தொகையானது நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) மாநாகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 252(1)(ஆ) பந்தியின் பிரகாரம் நகர ஆணையாளரினால் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த தொகை மற்றும் பற்றுச்சீட்டிடப்பட்ட தொகையின் கூட்டுத்தொகை ரூபா 47,321,931 இனை அறவிடுவதற்காக வரி சேகரிக்கும் 14 பேருக்காக காலாண்டு ரீதியாக கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வரியில் மூன்று காலாண்டின் போது ரூபா 4,217,129 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இந்த வரி சேகரிக்கும் இருவர் தவிர எஞ்சிய 12 பேர்களிடமிருந்தும் வரி அறவீடு செய்யும் சதவீதம் 15 அளவிலான சிறிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

(உ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 35,341,291 நிலுவை வரியினை அறவீடு செய்வதற்காக மாநகரசபைக் கட்டளைச்சட்டத்தின் 252(1)(அ) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

மீளாய்வாண்டின் போது மாநகரசபைக்குரிய 08 வியாபர இடங்களில் 378 கடைகளிலிருந்து ரூபா 19,702,109 நிலுவையாக இருந்த தொகையும் 99 கடைகளிலிருந்து ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் ரூபா 19,909,620 தொகையுமாக ரூபா 39,611,729 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3 பஸ் நிலைய வியாபாரத் தொகுதியை நிர்மாணித்தல்

மேற்கூறப்பட்ட நிமாணத்திற்காக 1995 சனவரி 03 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து ரூபா 49,774,022 தொகையான கடன் பணம் பெறப்பட்டு வியாபாரத் தொகுதியில் 120 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன் பணத்தைச் செலுத்தி முடிவுறுத்த வேண்டியிருந்ததுடன் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டித்தொகை ரூபா 126,480,000 ஆக இருந்தது.

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உடன்படிக்கையின் படி எவ்வித கடன் தவணைப் பணமும் செலுத்தப்படாதிருந்ததுடன் வட்டியாக ரூபா 9,556,612 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

கடை வாடகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் மற்றும் மாதாந்த கடை வாடகைப் பணம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று எனக்குச் சமர்ப்பிக்குமாறு 2010 ஒக்தோபர் 06 ஆந் திகதி என்னால் நகரபிதாவிடம் கோரியிருந்த போதிலும் 2013 மே 22 ஆந் திகதி வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை.

## 2.4 நடைபாதை வியாபாரக் கடைகளை நிர்மாணித்தல்

சபைக்குரியதாக இருந்த நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து 2007 ஏப்ரல் 20 ஆந் திகதி மாத்தறை றுஹுணு அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 9,500,000 கடன்தொகை பெறப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் எவ்வித கடன் தவணைப் பணமும் 2013 மே 31 ஆந் திகதி வரை செலுத்தப்படாதிருந்ததுடன் வட்டியாக ரூபா 5,012,242 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணைப்பணம் செலுத்தப்படாமையினால் சபைக்குரியதாக இருந்த நிலையான வைப்பை வங்கி கையேற்றிருந்தது. கையேற்கும் சந்தர்ப்பத்தின் போது நிலையான வைப்புக்களின் பெயரளவுப் பெறுமதி (வட்டி உள்ளடலங்கலாக) ரூபா 15,971,619 ஆகும். உடன்படிக்கையின் படி கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன செலுத்தப்படுமாயின் 2013 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டி ரூபா 12,757,462 தொகை சீராக்கப்பட்டதன் பின்னர் மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 7,745,220 ஆக இருந்தது. வங்கியினால் 2013 மே 31 ஆந் திகதி நிலையான வைப்பை கையேற்ற சந்தர்ப்பத்தின் போது அவற்றின் பெயரளவுப் பெறுமதி (வட்டி உள்ளடங்கலாக) ரூபா 15,971,619 தொகை ஆனமையால் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன நாளதுவரையாகச் செலுத்தப்படாமையினால் சபைக்கு ஏற்பட்ட நிதிரீதியான நட்டம் ரூபா 8,226,399 ஆகும்.

## 2.5 நகர பிதாவிற்கு மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்தல்

நகர பிதாவிற்கு மோட்டர் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக றுஹுணு அபிவிருத்தி வங்கியில் ரூபா 5,600,000 பெறுமதியான நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து 2007 ஆம் ஆண்டில் ரூபா 5,625,000 தொகையில் மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2013 மே 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டித்தொகை என்பன ரூபா 7,550,208 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு எவ்வித கடன் தவணைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் உள்ளவாறு வட்டியாக ரூபா 3,324,260 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணைப் பணம்

மற்றும் வட்டித்தொகை என்பன நாளதுவரையாகச் செலுத்தப்படுமாயின் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை ரூபா 4,225,748 ஆகும். கடன் தவணைப் பணம் செலுத்தாமையினால் நிலையான வைப்பின் பெறுமதி 2013 மே 31 இல் வங்கி கையேற்றிருந்ததுடன் அச் சந்தர்ப்பத்தின் போது நிலையான வைப்புக்களின் பெயரளவுப் பெறுமதி ரூபா 8,969,917 ஆக இருந்தது. கடன் தவணைப் பணம் நாளது வரையாகச் செலுத்தாமையின் காரணமாக சபைக்கு ரூபா 4,744,169 தொகையான நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.6 மாத்தறை பஸ் நிலையத்தில் கழிவகற்றல் முறைமையை நிர்மாணித்தல்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,675,376 தொகையான நிதியேற்பாடு 2012 பெப்ரவரி 28 ஆந் திகதி சபைக்குக் கிடைத்திருந்தது. கழிவகற்றல் முறைமையினை நிர்ாமணிப்பதற்காக தனியார் நிறுவனத்துடன் ரூபா 3,675,376 பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ரூபா 2,061,097 தொகை உரிய ஒப்பந்தக்கார நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை நிலமீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கழிவகற்றல் முறைமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிர்மாணங்களின் பிரகாரம் (Septic tank and up low filters) பஸ் நிலைய மலசலகூடங்களில் கழிவுகள் நேராக அடித்துச் செல்லப்படாதிருந்ததுடன் சபை நிர்மாணித்த தாங்கியின் ஊடாக அந்தக் குழிக்குள் சேர்கின்றமை 2013 யூன் 28 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 7 மீற்றர் நீளமும் 4.4 மீற்றர் அகலமும் கொண்ட புதிய தங்கியில் கழிவுப் பொருள்களுடன் கலந்த நீர் குழாய் ஊடாக தூரத்திலுள்ள பிரதான வடிகாலுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதிலிருந்து துர்வாடை வீசியமையினால் அதிலுள்ள நீர் தொடர்பான பரிசோதனை அறிக்கையொன்று 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதிய இலங்கை நிலமீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை 2013 யூன் 28 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/6 ஆம் இலக்க வர்த்தமானியின் 62 ஆவது பிவிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக மலசலகூட கழிவுகள் மாத்தறை நகரத்தின் பிரதான வடிகாலுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வடிகாலும் உடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் பஸ் நிலையத்தின் சில கடைகளில் சுவர்கள் அனுமதியின்றி உடைத்து அகற்றப்பட்டு அதில் கழிவுப் பொருட்கள் பிரதான வடிகாலுக்கு வடிந்து செல்வதற்கு திட்டமிட்டமையினால் மிகவும் மோசமான நிலையை அங்கு காணக்கூடியதாக இருந்தது.

(ஈ) ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி முறி மற்றும் ஒப்பந்தக்காரரின் ஆபத்துக்களுக்கான செயலாற்றல் பிணைமுறிப் படிவங்களின் (Bid Bond, Contractor's Risk Insurance Performance Bond) காலம் 2012 மே 30 இல் காலங்கடந்திருந்த போதிலும் அவற்றை நாளதுவரையாக்குவதற்கு அதிகாரத்தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2012 மார்ச் 20 ஆந் திகதியின் பின்னர் உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 126,341 தொகை தாமதக் கட்டணமாக அறவிட வேண்டியிருந்தது.

(ஊ) நிர்மாணங்கள் தொடர்பான பௌதீக செயல்முன்னேற்ற அறிக்கை நகரசபை மற்றும் மாத்தறை மாவட்ட செயலகம் 2012 நவம்பர் 22 ஆந் திகதியில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நில்வள கங்கை அருகில் கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற இடத்தை மீளமைக்கும் செயற்திட்டத்திற்காக சபைக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து ரூபா 12,989,500 தொகை வழங்கப்பட்டு அத்தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டம் கைவிடப்பட வேண்டியிருந்தமையினால் செய்யப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபைக்குரிய கொட்டவிலயில் அமைந்துள்ள கந்தகெட்டிய வத்த காணியில் பொலித்தீன்/ கழிவுப்பொருட்கள் மீள்சுழற்சி செய்யும் செயற்திட்டத்திற்காக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துடன் 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி ரூபா 4,828,236 பெறுமதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டு செய்யப்பட்ட வேலைகளுக்காக 2013 யூன் 13 ஆந் திகதி ரூபா 1,296,903 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(அ) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் 2013 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அத்திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு கட்டிடத்தின் சுவர் கட்டப்பட்டு கூரைக்காக இருப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தது.

(ஆ) இந்த செயற்திட்டம் இலக்கிடப்பட்ட காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்படாமையினால் சபையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற கொட்டவில கூட்டுப்பசளை நிலையத்தில் சேகரிக்கப்படுகின்ற பொலிதீன், பிளாஸ்டிக் என்பன மீள்சுழற்சி செய்யப்படாமல் அகற்றப்பட்டிருந்தமை 2013 யூன் 28 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் இடமாறிச் சென்ற, ஓய்வு பெற்ற, மரணித்த மற்றும் சேவையைவிட்டுச் சென்ற 110 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து ரூபா 339,253 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஏழு அலுவலகங்களில் 315 பொருள் விடயங்கள் பற்றாக்குறைக்கு பொறுப்புவாய்ந்த நபர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக ரூபா 1,391,712 தொகை அரசாங்கத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரசாங்க சபையின் 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நகர பிதா, உப நகர பிதாவை உள்ளடக்கிய 13 உறுப்பினர்களினாலும் 04 உத்தியோகத்தர்களினாலும் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபை 2002 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவையாக இருந்த ரூபா 6,945,647 தொகையான கணக்காய்வுக் கட்டணத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆயுர்வேத மருந்தகத்தின் பதவியணியினருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,149,674 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஆயுர்வேத உதவி பெற்றுக்கொள்வதற்காக ஆயுர்வேத ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனித வள முகாமைத்துவம்

(அ) 2002 சனவரி 03 ஆந் திகதிய 14 ஆம் இலக்க திறைசேரிச் செயராளரின் மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்களின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 120 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 10,744,092 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபை கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 143 ஆகும். இந்த வெற்றிடத்திற்குள் நகரச் செயலாளர், நகர வைத்திய உத்தியோகத்தர், நகர வடிவமைப்பு கலைஞர், சட்ட உத்தியோகத்தர், நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் இயந்திரம், பொது

சுகாதாரப் பரிசோதகர், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மற்றும் வருமானப் பரிசோதகர் போன்ற பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் போது 01 ஆரம்ப தீயணைப்புப் பதவி, 03 முதலாந்தர தீயணைப்புப் பதவிகள், 15 இயந்திர தீயணைப்புப் பதவிகள் மற்றும் 15 தீயணைப்புப் பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தமையினால் அவசரமாக தீப்பிடிக்கும் சந்தர்ப்பங்களில் அதனை அணைப்பதற்கான இயலுமை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.12 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு